# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# அ.வ.எண். 117/2018

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11ம் நாள் திங்கட்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

வ.சா.1. சுலோச்சனா.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** இந்த வழக்கு தாக்கல் செய்து 8 வருடங்கள் ஆகிறது. பிரதிவாத இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. பிரதிவாதி என்னுடன் பிறந்த சகோரர்களுக்கு இந்த வழக்கு விவரம் தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது சகோதரர்களை நீக்கிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த விவரத்தை நான் எதிர் வழக்குரை மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு பிறகுதான் எனது சகோதரர்கள் எனக்கு வா.சா.6 விடுதலை பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான்தான் எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. 2021ம் ஆண்டில்தான் விடுதலை பத்திரம் எழுதி வாங்கினேன் என்றால் சரிதான். ஏற்கனவே விடுதலை பத்திரம் இருந்தது அது வீடு எரிந்த போது எரிந்துவிட்டது. விடுதலை பத்திரத்தை எப்போது எங்கு வைத்து எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை அதனால் எனக்கு தெரியாது.

2. விடுதலை பத்திரம் எரிந்துவிட்டது என்று வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன். வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2021ல் நான் எழுதி வாங்கிய விடுதலை பத்திரம் வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்பதால் செல்லாது என்றால் சரியல்ல. அது இந்த வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதன் பிறகுதான் பட்டா வாங்கினேன் என்றால் சரியல்ல. எனது

தந்தை காலத்திலேயே பட்டா உள்ளது. ஜோதிலட்சுமி பெயரில் வழக்கிற்கு பின்னர் பட்டா வாங்கப்பட்டது என்றால் சரிதான். நானும் எனது சகோதரிகளும் சேர்ந்து வழக்கு சொத்தை விற்றதால் நான் சாட்சியம் அளிக்கிறேன். உரிமை இல்லாத சொத்திற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.7 வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்பதால் செல்லாது என்றால் சரியல்ல.

3. எனது தந்தை மற்றும் சகோதரர்கள் பிரதிவாதியின் தந்தைக்கு கிரைய லெட்டரை 07.08.1982ல் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அடமானம்தான் எழுதி கொடுத்தார்கள். எனது தந்தை இறந்த பிறகு எங்களை பயிர் செய்யவிடவில்லை. அடமானம் எழுதி கொடுத்ததலிருந்து பிரதிவாதிதான் பயிர் செய்கிறார். 1982ல் இருந்து பொன்னுசாமி பயிர் செய்தார் என்றும் அவர் இறந்த பிறகு பிரதிவாதி பயிர் செய்கிறார் என்றும் சொன்னால் சரிதான். வழக்கில் நான் சொல்லியுள்ளது தவறு என்றும் வழக்கு சொத்தில் உரிமை கோர வாதிகளுக்கு உரிமை இல்லை என்றால சரியல்ல. தாவா சொத்தில் நீர்பாசன வசதி இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தை ஏற்றம் இறைத்து பயிர் செய்தார். தற்போது பாசன வசதி உள்ளது. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.